இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவரோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார். இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறு பெறுவார். நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறு பெறுவார். இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்." (மத் 10: 40-42)

# 'அகதிகளுக்கு வேலை கொடுங்கள்'

## தனியார் நிறுவனங்களுக்குத் திருத்தந்தை வேண்டுகோள்!



**வத்திக்கான்:** 2000-ஆம் ஆண்டு, ஜூன் 20 அன்று, உலகெங்கிலும் வன்முறை மற்றும் போர்களால் இடம்பெயர்ந்த சுமார் 27.1 மில்லியன் அகதிகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் 'உலக அகதிகள் தினம்' ஏற்படுத்தப்பட்டது.

இந்த நாளைக் குறிக்கும் வகையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொடர்ந்து அகதிகளுக்காக இறைவேண்டல் மற்றும் உதவி நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் அமேசான் மற்றும் மைக்ரோசாப்ட் (Amazon and Microsoft) உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் ஐரோப்பாவில் 250,000 அகதிகளை கூட்டாக வேலைக்கு அமர்த்த உறுதியளித்துள்ளன என்றும் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று ஒரு டுவீட்டர் பதிவில் திருத்தந்தை பிரான்சிஸ், "போர்கள் மற்றும் காலநிலை மாற்றத்திலிருந்து தப்பிக்க அகதிகளாக அண்டை நாடுகளுக்கு தப்பி ஓடும் அவநம்பிக்கையான மக்களில் கிறிஸ்து இருப்பதை நினைத்துப் பார்க்கிறேன்" என்று தம் பரிவிரக்கத்தை வெளிப்படுத்தினார்.

"பாதுகாப்பு தேடி தப்பியோடி வரும் அகதிகளின் பிரச்சனைகளை ஒன்றாக எதிர்கொள்ள வேண்டும்" என்று திருத்தந்தை மேலும் கூறினார். இல்லையேல் இதன் விளைவுகளை நாம்தான் சந்திக்க தேரிடும் என்றும் நாடுகளுக்கு அறிவுறுத்தினார்.

அமேசான் நிறுவனம் 5,000 அகதிகளை பணியில் அமர்த்த உறுதியளித்துள்ளது என்றும், அதில் உக்ரேனிய பெண்களை



வேலைக்கு அமர்த்துவதில் சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளது என்றும் திருத்தந்தை செய்தியில் பதிவுச் செய்துள்ளார்.

"உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு முடிவில்லாதது - மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (European Union) மில்லியன் கணக்கான உக்ரேனியர்களை வரவேற்கிறது - அகதிகள் நீண்ட கால திட்டத்தில் வேலைகளில் அமர்த்தும் மற்றும் தொழிலாளர் சந்தையில் ஒருங்கிணைப்பதன் மூலம் அகதிகளுக்கு நம்பிக்கையை வழங்குவது கட்டாயமாகும்" என்று ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டதாக திருத்தந்தை செய்தி வெளியிட்டார்.

தொடரந்து, கடந்த ஜூன் 20ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று புகலிடம் தேடுவோர் உலக தினம் சிறப்பிக்கப்படுவதைக் குறித்து நண்பகல் மூவேளை செப உரைக்குப்பின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த புதனன்று ஏறக்குறைய 400 முதல் 750 பேரை ஏற்றி வந்த மீன்பிடிப் படகு ஒன்று அமைதியான கடல் சூழலிலும் கிரேக்கம் அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொண்டார்.

நிறைவாக, போராலும், உள்நாட்டு மோதல்களாலும், சித்ரவதைகளாலும், வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாதக் காரணத்தாலும் புலம்பெயரும் மக்களுக்கு நம்பிக்கையை வழங்கி அவர்களைக் காப்பாற்றவேண்டிய கடமையை வலியுறுத்தியுள்ள ICMC எனப்படும் அனைத்துலகக் குடிபெயர்வோர்க்கான கத்தோலிக்க அமைப்பு, இத்தகைய கோர விபத்துக்கள் குறித்து உலகம் கை கட்டி மௌனம் காக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளது.

### உலக அகதிகள் தினம் 2023 முக்கியத்துவம்

அகதிகள் மற்றும் தனிநபர்கள் தங்கள் வீடுகளில் இருந்து வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்தவர்களின் அவலநிலை குறித்து உலகளாவிய கவனத்தை ஈர்க்கும் வகையில் உலக அகதிகள் தினம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களின் உரிமைகளுக்காக வாதிடவும், அவர்களின் சூழ்நிலைகளில் பச்சாதாபத்தையும் இரக்கத்தையும் வளர்ப்பதற்கான ஒரு தளமாக இது செயல்படுகிறது. அகதிகள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு, ஆதரவு மற்றும் நீடித்த தீர்வுகளின் முக்கியத்துவத்தை இந்த நாள் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

CNN செய்தி
தமிழாக்கம்: தமிழாக்கம் -ஆர்.கே.

# 'இருண்ட மேகங்களை வெல்லுங்கள்- எதிர்காலத்தை நம்பிக்கையுடன் தழுவுங்கள்'

## துறவறத்தாருக்கு ஆயர் அறிவுறுத்து

**பிலெந்தோங்,** ஜோகூர்: அருட்சகோதர சகோதரிகள் திருஅவையில் கிறிஸ்துவின் பணியில் பெரும் பங்கு வகிக்கின்றனர். கடந்த ஜூன் 8-11 வரை, இங்கு மஜோடி மையத்தில் 2023-ஆம் ஆண்டு முதல் மலேசிய துறவறத்தார் சபை பேரவையில் ஆயர்கள் இதை உறுதிப்படுத்தினர். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தில் 28 கத்தோலிக்கத் துறவறத்தார் சபைகளை பிரதிநிதித்து நூற்று எண்பத்து நான்கு பேர் கலந்துகொண்டனர்.



மலேசிய இருபால் துறவறத்தார் பேரவையில் கலந்துகொண்டோர்

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர், பெர்னர்ட் பவுல் தனது முக்கிய உரையில் தற்போது நிலவும் சூழ்நிலைகளின் நிலவரத்தை விவரித்தார். கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் நம்பிக்கையிழந்த மக்கள் மத்தியில், அவர்கள் நம்பிக்கை விண்மீன்களாகவும் ஆற்றலாகவும் உள்ளனர் என்று மேலும் கூறினார். ஏனென்றால் அவர்கள் இந்த உலகத்தை அன்பாகப் பார்க்கும்போது கூட அவர்களின் கண்கள் கிறிஸ்துவின் மீதுதான் உறுதிகொண்டுள்ளன என்று அறிவுறுத்தினார். இக்காலத்தில், எண்ணிக்கையில் குறைந்தும், வயதில் முதிர்ந்தும், இறையழைத்தல் குறைந்தும் காணப்படும் வேளையில், அர்ப்பண வாழ்வுக்கு அருள்பொழிவுப்பெற்ற துறவறத்தாரின் பணி தொடர வேண்டும் என்றும், அவர்களின் திருப்பணி போற்றுதலுக்குரியது என்றும், திருஅவை மற்றும் சமூக முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து முக்கிய பங்கை துறுவறத்தார் ஆற்றி வருகின்றனர் என்றும் வாழ்த்தினார்.

மலேசியா, சிங்கப்பூர், புருணை ஆகிய நாடுகளின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் சார்பாக தனது உரையை நிகழ்த்திய ஆயர் பெர்னர்ட் கோவிட்-19, தொற்று நோய்களின் போது உலகை மூழ்கடித்த 'கருமேகங்கள்' மற்றும் அதைத் தொடர்ந்து

தொடர்ச்சி – அடுத்துப் பக்கம்..

# ‘இருண்ட மேகங்களை வெல்லுங்கள்- எதிர்காலத்தை நம்பிக்கையுடன் தழுவுங்கள்’

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் பெர்னர்ட் அவர்கள் நமது கத்தோலிக்கச் சமூகங்களைச் சூழ்ந்துள்ள கருமேகங்களையும் தொட்டுப் பேசினார். அவர்கள் தங்கள் உண்மையான பணியை மறந்துவிட்டு, அதற்குப் பதிலாக தங்கள் சிறுமை, பலவீனம், சக்தியின்மை மற்றும் பலனின்மை ஆகியவற்றில் மூழ்கியுள்ளனர் என்று மேலும் கருத்துரைத்தார்.

துறவறத்தார் தங்களைச் சுற்றியுள்ள நிகழ்கின்ற பல நிகழ்வுகளுக்கு தங்கள் கண்களைத் திறக்கும்படி அவர் வலியுறுத்தினார். நல்ல சமாரியன் உவமையைப் பற்றி, ஆயர் பாதிக்கப்படக்கூடியவர்கள், அண்டை வீட்டார் மற்றும் பாதிக்கப்பட்டவர்களிடம் நம்பிக்கை ஒளியை ஏற்ற வேண்டும் என்று கூறினார். இவ்வுலகில் நமது 'கூடாரத்தை விரிவுப்படுத்த’ நாம் அழைக்கப்படுகிறோம் என்றார். அதாவது நாம் வெளியே சென்று, குடும்பத்தில் ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தைப் பாதுகாக்கவும் மதிக்கவும், உறுதிப் படுத்தவும் அழைக்கப்படுகிறோம் என்றும் அனைத்து துறவறத்தாரையும் கேட்டுக் கொண்டார்.

“இருண்ட மேகங்கள்’ உலகநலனுக்கான அக்கறைகொண்ட இதயம் நமக்கு



*ஆயர் பெனர்ட் பவுல்*

இருக்கும்போது அவை வழிவிடும். புலம்பெயர்ந்தோரை நாம் வரவேற்கும் போது, பாதுகாக்கும்போது, ஆதரிக்கும் போது, அரசியல் இலாபம் கருதாமல் தொண்டு செய்யும் போது, பொது நன்மை மற்றும் மக்களின் முக்கியத்துவத்தை நாம் உணர்வோம் என்று ஆயர் வலியுறுத்திக் கூறினார்.

-செய்தி –தமிழாக்ககம்

*-த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா*

# நிபோங் தெபாலில், புனித அந்தோணியார் திருவிழா கொண்டாடப்பட்டது

**பினாங்கு** : இங்குள்ள நிபோங் தெபால் நகரில் அமைந்துள்ள பதுவை புனித அந்தோணியார் ஆலயத்தின் ஆண்டு திருவிழா கடந்த ஜூன் 9-ஆம் திகதி கொடியேற்ற நிகழ்ச்சியுடன் தொடங்கியது. இவ்வாண்டு திருவிழாவானது, இப்பங்கின் 146வது விழா என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு திருவிழாவுக்கான கருப் பொருள் ‘பங்கேற்பு, ஒன்றிப்பு மற்றும் தோழமை’ என்பதாகும். பங்குத்தந்தை அருள்நாதன் ஜோசப் அவர்கள், தமிழகத்தின் சென்னை மாநகரிலிருந்து அருள்தந்தை புஷ்பராஜ் (OFM) அவர் களை இந்த 10 நாள் கொண் டாட்டத்தின் திருப்பலிகளுக்காகவும் மறையுரைகளுக் காகவும் அழைந்திருந்தார்.

ஒவ்வொரு நாளும், திருப்பலிக்கான தயாரிப்புப் பணிகளை பங்கின் அடிப்படை திருஅவை சமூகத்தினர் பொறுப்பேற்று நிறைவு செய்தனர். பங்கின் பராமரிப்பு பணிக்குழு, திருவழிபாட்டு பணிக்குழு, போக்குவரத்து பாதுகாப்பு பணிக்குழு மற்றும் பங்கின் மேய்ப்புப்பணி குழு ஆகியோர் திருவிழாவின் வெற்றிக்கு அயராது உழைத்தனர்.

ஒவ்வொரு நாளும், இறைமக்களுக்கு திருப்பலிக்குப் பின் வழங்கப்பட்ட உணவுக்கு இரு அடிப்படை திருஅவை சமூகத்தினர் பொறுப்பேற்று, செவ்வன உதவினர். கடந்த 13-ஆம் திகதியும், 17 மற்றும் 18-ஆம் திகதியும் பெருமளவிலான மக்கள் வழிபாட்டிற்குத் திரண்டிருந்தனர். இறுதி நாளன்று திருப்பலிகள் தமிழ்,



ஆங்கிலம் மற்றும் சீன மொழியிலும் கொண்டாடப்பட்டது.

பங்குத் தந்தை விழா ஏற்பாட்டுக் குழுவினர்களுக்கும் அனைத்து பணிக்

# மணிப்பூரில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர் களுக்குப் பேராயர் ஆதரவு

மணிப்பூரில் அதிகரித்து வரும் இனப் பதட்டங்கள் மற்றும் வன்முறையால் இடம்பெயர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பணிபுரியும் இளைஞர்கள் குழுவிற்குப் பெங்களூரு உயர்மறைமாவட்டம் அடைக்கலம் மற்றும் ஆதரவை வழங்குவதாகக் கூறியுள்ளார் அம்மறைமாவட்டத்தின் பேராயர் பீட்டர் மச்சாடோ.

பெங்களூரு உயர்மறைமாவட்டத்தில் உள்ள மறைமாவட்ட மற்றும் துறவியரின் கல்வி நிறுவனங்களில் அவர்கள் தங்களுடைய கல்வியைத் தொடரலாம் என்றும், தங்கும் விடுதி வசதிகளுடன் கூடிய கல்வி நிறுவனங்களையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் உறுதியளித்துள்ள பேராயர் மச்சாடோ. அவர்கள் பெங்களூரு கல்விக்குச் சிறந்த இடம் என்பதையும் எடுத்துக்காட்டியுள் ளார்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*



*புலம்பெயர்ந்து பெங்களூருக்கு வந்துள்ள மணிப்பூர் கிறிஸ்தவர்கள்*

# சீடத்துவத்திற்கு அழகு இயேசுவின் அறிவுரை ஏற்பது

ஆண்டின் பொதுக்காலத்தின் 13-வது ஞாயிறுவில் இணைந்துள்ளோம். இன்றைய முதல் வாசகத்தில், கடவுளின் இரக்கத்தை குழந்தைபேறு அற்ற ஒரு பெண்ணுக்கு வெளிப்படுத்துகிறார் எலிசா. அவளோ, செல்வமிக்கவர். ஆனால். குழந்தை செல்வத்திற்கு ஏங்கியவள். கணவனும் மனைவியும் பிறர் நலம் பேணும் இறை பக்தர்கள். எலிசா அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று உறுதிமொழி அளிக்கிறார். இரக்கமுடையோருக்கு கடவுள் இரக்கம் காட்டுவார்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அடியார், கிறிஸ்துவோடு நாம் இறந்தோ மாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை என்று நமக்கு கடவுளின் இரக்கத்தை மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

நற்செய்தியில், இயேசு தன்னுடைய சீடர்களிடம், என்னைவிடத் தன் தாய், தந்தை, மகன், மகள் ஆகியோரிடம் மிகுதியாக அன்பு கொண்டிருப்பவர் என்னுடைய சீடராக இருக்க முடியாது என்கின்றார். இயேசு இவ்வாறு சொல்வதால், இயேசுவின் சீடராக இருக்க விரும்புகின்றவர், தன்னுடைய குடும்பத்தில் இருப்பவர்களை வெறுக்கவேண்டும் என்பதல்ல. மாறாக, அவர்களைவிட இயேசுவை அன்பு செய்யவேண்டும், அவருக்கு முதன்மையான இடம் தரவேண்டும். இத்தகைய வாழ்விற்கு இயேசுவே மிகச்சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றார்.

ஆம், இயேசுவின் கொள்கை சுயநலத்திற்காக சமரசம் செய்வதல்ல. தேவைப்பட்டால், எதிர்த்து எழுவது. கிளர்ச்சி செய்வது. நீதி, பரிவு, ஓய்வு நாளிலும் குணமாக்கல், ஒதுக்கபட்டோ ருடன் உறவு போன்றவற்றில் இந்த சமுதாயம் என்ன நினைக்கும், எனது சீடர்கள் என்ன நினைப்பார்கள், என் உறவினர்கள் என்ன சொல்வார்கள் என்றெல்லாம் இயேசு எண்ணவுமில்லை, அஞ்சவுமில்லை. அனைத்துக்கும் மேலாக, யாரிடமும் எந்தவிதமான சமரசமும் செய்து கொள்ளவில்லை. தந்தையின் திருவுளத்திற் காக, கொண்ட கொள்கைக்காக இறுதியில் உயிரையும் கொடுத்தார்.

நாம் நம் சொந்த இரத்த உறவுகளைவிட இயேசுவுக்கு முதன்மையான இடம் தருவது சீடத்துவ வாழ்வின் முதல்நிலை. அடுத்து, நம் உயிரைவிட இயேசுவுக்கு முதன்மையான இடம் தருவது சீடத்துவ வாழ்வின் இரண்டாம் நிலை. இதுகுறித்து இயேசு தொடர்ந்து பேசுகின்றபொழுது, “…தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர்” என்கின்றார். ஆம். இயேசுவின் சீடர் அவருக்காகத் தன் உயிரையும் இழக்கத் துணிகின்றபொழுது, அதை காத்துக் கொள்பவராக இருக்கின்றார்.

இவ்வுலகக் கவர்ச்சிகளால் ஈர்க்கப்பட்டு, இவ்வுலகத்தைச் சார்ந்தவற்றையே விடாது பிடித்துக்கொள்ள விரும்புகின்ற சீடர்கள் ஏமாற்றமே அடைவர். அவர்கள் நிலையானது என நினைப்பது உண்மையிலேயே நிலையற்றது என இறுதியில் அவர்கள் உணர்ந்துகொள்வர். அகவே, இன்றைய முதல் வாசகத்தோடும், இரண்டாம் வாசகத் தோடும் நற்செய்தியை ஒப்பிடும்போது, கடவுளுக்கான அன்பை நமது வாழ்வில் வெளிப்படுத்தும்போது, அவரது இரக்கத்தை பெறுவோம், அவரது நிலைவாழ்வில் பங்கு பெறுவோம்.

*-ஆவி, டேவிட், குளுவாங்*

**ஆண்டின் பொதுக்காலம் 13-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | 2 அர 4: 8-11, 14-16a |
| பதி.பாடல் | திபா 89: 1-2. 15-16. 17-18 |
| 2 வாசகம் | உரோ 6: 3-4, 8-11 |
| நற்செய்தி | மத்தேயு : 10:37-42 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 1**